# தமிழ் இலக்கியங்களில் பெண்ணியம்

*முனைவர் டே. ரமணி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
பிஷப்கால்டுவெல் கல்லூரி, மறவன் மடம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6446

***ஆய்வுச் சுருக்கம்***

*பெண்களுக்கு எல்லா நிலைகளிலும் சுதந்திரம், சமத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே பெண்ணியம் ஆகும். ஆண்களுக்கு எதிரான கொள்கையே பெண்ணியம் என்பதல்ல. ஆண், பெண் இருவராலும் பெண்களுக்கு ஏற்படுகின்ற கொடுமைகளிலிருந்து விடுவிக்கப் போராடுவதே பெண்ணியம். பெண்கள் இந்நிலையை அடைய வேண்டுமெனில் கல்வியாலும், சமுதாய விழிப்புணர்வாலுமே அடைய முடியும். சமூகத்தில் ஆண்களுக்கு இணையான மதிப்பைப் பெறுவதே பெண்ணியம். ஆரம்ப காலக் கட்டத்தில் பெண்கள் பல துறைகளில், போதிய உரிமைகளும், கல்வியும் உடையவர்களாகவே இருந்தனர். சங்க காலத்தில் கவிதை இயற்றுவதில் சிறப்புற்றிருந்தது போல பல துறைகளிலும் சிறப்புற்றிருந்தது போல தொடர்ந்திருந்தால் இன்னும் சிறப்பு பெற்றிருப்பார்கள்.*

## முன்னுரை

இலக்கியம் மனித வாழ்வை மையமாகக் கொண்டது. மனிதனின் சிந்தனைக்கும், உணர்வுக்கும் விருந்தாக அமைகிறது. தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கும் பெண்ணியக் கருத்துக்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ்ச் சமூகம் பெண் என்ற காரணத்திற்காக அவளுக்கென்று சில விதிமுறைகளை வகுக்கிறது. அதன்படி நடக்க வேண்டும் என்ற கட்டளையும் இடுகிறது. இது பெண்களின் வளர்ச்சிக்கும், பெண்மைக்கும் முட்டுக் கட்டையாக அமைகிறது. தமிழ்ச் சமூகத்தில் கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல், அதிகாரம், உரிமை போன்ற அனைத்திலும் பாலின அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளை ஒழித்து சம உரிமை பெறுவதலே பெண்ணியம் ஆகும்.

## பெண்ணின் பெருமை

தமிழர் தம் வாழ்வின் தொடக்க காலந்தொட்டே பெண்மையைப் போற்றிச் சிறப்பித்தார்கள்.

***"அச்சமும் நாணும் மடனும் முந்துறதல்***
***நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"***

***(தொல்காப்பியம், களவியல், நூற்பா:8)***

இவையெல்லாம் பெண்ணுக்குரிய குணங்களாகத் தொல்காப்பியம் கூறுகிறது. மேலும் கற்புநிலையில் பெண்கள் சிறந்து விளங்கியதும் இதன்மூலம் அறிய முடிகிறது.

**நல்லியற் பாவை யன்ன நல்லோள் கணவன்**
***(பதிற்றுப்பத்து,பா.எ.61)***
**மறுவில் கற்பின் வாணுதல் கணவன்**
***(திருமுருகாற்றுப்படை. அடி.6)***

என்ற வரிகள் பெண்களின் பெருமையை வெளிப்படுத்துபவையாக அமைந்துள்ளன. இன்றைய கால கட்டத்தில் பெண்கள் பணி புரியாத துறைகளே இல்லை. ஆண்களே அசந்து வியக்கும் வண்ணம் பல பெண்கள் தங்கள் ஆற்றலால் உயர்ந்த நிலையை அடைந்திருக்கின்றனர். சமுதாயத்தைத் துணிச்சலோடு எதிர்கொள்ளும் பெண்கள் உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான கல்வியறிவும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும் பட்ச த்தில் அனைத்து பெண்களும் உயர்வான நிலையை அடைகின்றனர்.

## நீதி இலக்கியங்களில் பெண்ணியம்

நீதி இலக்கியங்களில் தலை சிறந்ததாகக் கருதப்படுவது திருக்குறள். வள்ளுவர் இயற்றிய திருக்குறளில் பெண்ணியம் பேசப்படுகிறது. மனிதன் வாழ்க்கையில் பெறத்தக்க பேறுகளில் தலை சிறந்தது நல்ல வாழ்க்கைத் துணையைப் பெறுவதாகும். வாழ்க்கையில் எல்லாச் செல்வங்களும் பெற்றிருந்தாலும் இல்லாள் என்ற செல்வம் இல்லையென்றால் அதனால் ஒரு பயனும் இல்லை. ஆனால் எச்செல்வத்தினையும் பெறாத ஒருவன் நல்ல மனைவி செல்வத் தினை மட்டும் பெற்றிருப்பானேயானால் அவன் வாழ்க்கை வெற்றியடைந்து விடும். இதனைத் திருவள்ளுவர்

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை”**
***(குறள். எண்.53)***

என்ற திருக்குறளில் குறிப்பிடுகிறார்.

குடித்தனத்திற்கு ஏற்ற பெருமையுடையவளும் தன் கணவனுடைய வருவாய்க்கு ஏற்றபடி செலவு செய்கிறவளுமான மனைவியே சரியான வாழ்க்கைத் துணைவி என்கிறார் வள்ளுவர். இதனை

**மனைத் தக்க மாண்புடையளாகித்**
**தற்கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை**
***(குறள். எண்.51)***

என்ற திருக்குறளில் விளக்குகிறார்.

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்”**
***(திருக்குறள். குறள் எண்:54)***

கற்பு என்ற மன உறுதியுள்ள பெண்ணைக் காட்டிலும் பெருமை தரக்கூடிய பொருள் இவ்வுலகத்தில் ஒன்றும் இல்லை என்கிறார் வள்ளுவர். பெண்கள் உடலியல் மற்றும் மனையியல் சார்ந்த ஒழுக்கத்தின் விளக்கமாகவே விளங்கினர்.

## காப்பியத்தில் பெண்ணியம்

சிலப்பதிகாரக் காப்பியத்தில் வரும் கண்ணகி கதாபாத்திரம் பெண் எனப்படுபவள் போராடி வெற்றி பெறும் புகழுக்குரியவளாக படைக்கப்பட்டிருக்கிறாள். இக்காப்பியத்தில் கண்ணகி என்பவள் மாதரரில் சிறந்த பெண்ணாகப் படைக்கப்பட்டிருக்கிறாள்.

**மாதரார் தொழுதேத்து வயங்கிய**
**பெருங்குணத்துக்**
**காதலாள் பெயர் மன்னும் கண்ண**
**கியென் பாற்மன்னோ”**
***(சிலப்பதிகாரம், புகார்க்காண்டம்,***
***மங்கலவாழ்த்துப் பாடல்.)***

சிலப்பதிகாரத்தில் மாதவி என்ற பெண்ணும் பெருமைப்படுத்தப்படுகிறாள். ஆடற்கலையில் சிறந்தவளாக விளங்கக் கூடிய மாதவியின் சிறப்பை

**சிறப்பில் குன்றத்துச் செய்கையோடு பொருந்திய**
**பிறப்பில் குன்றாப் பெருந்தோள் மடந்தை”**
***(சிலப்பதிகாரம், புகார்க்காண்டம்,***
***அரங்கேற்றும் காதை 5-6)***

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். கண்ணகியை கடவுளில் சிறந்தவளாகவும், மாதவியை கணிகையர் குலத்தில் பிறந்து கற்பில் சிறந்தவளாகவும் படைத்திருக்கிறார், இளங்கோவடிகள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய குணங்கள் மட்டும்

பெண்களுக்கு உரியது அல்ல, பெருமையும் வலிமையும் பெண்ணுக்குரியவையே என வலியுறுத்துவதை சிலப்பதிகாரம் வழி அறிய முடிகிறது.

கம்பநாடர் தாம் இயற்றிய இராமாயணத்தில் தம் காவிய நாயகியாம் சீதையின் பண்புகளைக் குறிப்பிடும் பொழுது சீதை உயர்ந்த குடிப்பிறப்பின் உறைவிடமாகவும், பொறுமையின் நிலைக்களமாகவும், கற்பிற்கோர் அணிகலனாகவும் விளங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**விற்பெருந் தடந்தோள்வீர வீங்குநீர் இலங்கைவெற்பில்**
**நற்பெருந் தவத்தாளய தங்கையைக் கண்டேன் அல்லேன்**
**இற்பிறப்பு என்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்**
**கற்பெனும் பெயரதொன்றும்களிநடம் புரியக் கண்டேன்**

***(கம்பராமாயணம்; சுந்தரகாண்டம்; திருவடிதொழுத படலம்;: 29)***

**சங்க இலக்கியங்களில் பெண்ணியம்**

சங்ககாலப் பெண்கள் வீரமுடையவர்களாகவும், விவேகமுள்ளவர்களாகவும் விளங்கினர். பெண் புலவர்கள் இயற்றிய கவிதைகளை ஆண் புலவர்களின் கவிதைகளுடன் ஒப்பிடும்பொழுது அது எந்த விதத்திலும் குறைந்ததாகக் காணப்படவில்லை. மொழியிலும் பாடுபொருள்களைக் கையாள்வதிலும் ஆண் புலவர்களுக்கு நிகரான கல்விப்புலமையை அவர்கள் பெற்றிருந்தனர். பெண்களை மணம் புரிவதற்கு காளை அடக்குதல், மடலேறுதல் ஆகிய வீர விளையாட்டுகளில் ஆண்கள் ஈடுபட்டனர்.

அவ்வையார், காக்கைப்பாடினியார், நக்கண்ணையார், வெள்ளி வீதியார், வெண்ணிக்குயத்தியார் முதலானோர் புலவர்களாக இருந்து இலக்கியத் தொண்டாற்றியுள்ளனர். இவர்கள் கல்வியில் சிறந்தோங்கியது மட்டுமல்லாமல் அரசவைகளிலும் அங்கம் வகித்தனர். ஆண் புலவர்களுக்கு நிகராகப் புலமை பெற்றிருந்தனர். அரசனுக்கு ஆலோசனை கூறும் மந்திரியாகவும், தூது சென்று வெற்றியுடன் திரும்பும் மதிநுட்பம் கொண்டவராகவும், சமுதாயத்தைத் திருத்தும் ஆளுமைத்திறன் கொண்டவர்களாகவும் விளங்கினர்.

நாட்டுப்பற்றுடைய வீரம் செறிந்த கருத்துக்கள் நிறைந்த பாடல்களைப் பாடியுள்ளனர். காவற்பெண்டு பாடிய புறநானூற்றிப் பாடலில் ஒரு பெண் வீட்டின் அழகிய தூணைப் பற்றிக் கொண்டு நின் மகன் யாண்டுளனோ? என்று வினவுகிறாள்.

**என்மகன் யாண்டுளன்**
**ஆயினும் அறியேன் புலி**
**சேர்ந்து போதிய கல் அளை போல்**
**ஈன்ற வயிறோ இதுவே**
**தோன்றுவன் மாதோ**
**போர்க் களத்தானே**

***(புறநானூறு; பா.எண்.86)***

இப்பாடலில் ஒரு வீரத்தாயினுடைய பெருமை வெளிப்படுவதைக் காண முடிகிறது. புலவர் பொன்முடியார் பாடலில்,

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற் குக் கடனே**
**ஒளிருவாள் அருஞ்சமம் சுருக்கிக்**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குத் கடனே**

***(புறநானூறு பா.எ.312)***

இப்பாடலில் ஒவ்வொருவரின் கடமைகள் கூறப்பட்டாலும் ஒரு மகனைப் பெற்று புறத்திற்கு அதாவது போர்க்களத் திற்கு தருதல் ஒரு தாயினுடைய கடமை என்பதை அழகாக வெளிப்படுத்துகிறார்.

ஆண்களுக்கு நிகராகப் புலமை பெற்றிருந்த பெண்கள் அரசரிடம் கொண்ட அளவு கடந்த அன்பின் காரணமாக உரிமை மீறலிலும் ஈடுபடுகின்றனர். ஔவையார் என்னும் பொண்பாற்புலவர் தனக்குப் பரிசில் அளிக்க காலம் தாழ்த்திய அதியமானிடம்

**கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி**
**தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்?**

***அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென***
***வறுந்தலை உலகமும் அன்றே அதனால்***
***காவினம் கலனே சுருக்கினெம் கலப்பை***
***மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்***
***மழுவுடைக் காட்டகத்து அன்றே***
***எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே***
***(புறநானூறு 206:6-13)***

என்று பாடுகிறார் ஔவையார் தன்னுடன் சில நாட்கள் இருக்க வேண்டும் என்ற காரணத்தால் அதியமான் பரிசில் தராமல் காலம் தாழ்த்தினான் என்பதை அறியாமல் கோபத்தோடு பாடுகிறார். இது கோபத்தோடு பாடப்பட்ட பாடலாயிருந்தாலும் அரசனிடம் கொண்ட உரிமை உணர்வை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

## தற்கால இலக்கியங்களில் பெண்ணியம்

பெண்கள் முன்னேற்றத்திற்கான பாதையை வகுத்த பாரதியார் பெண்கல்வி, பெண்விடுதலை பற்றிய கவிதைகளில்

***மாதர் தம்மை இழிவு செய்யும்***
***மடமையைக் கொளுத்து வோம்***
***(பாரதியார் கவிதைகள்***
***புரட்சிப் பெண் - பா.எ.7)***

***ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்***
***(பாரதியார் கவிதைகள்***
***புரட்சிப் பெண்- பா.எ.4)***

என்று பெண்ணினத்தைப் பெருமைப்படுத்திப் பேசுகிறார்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மலரும் மாலையும் என்ற நூலில் பெண்ணின் உரிமைகள் என்ற தலைப்பில்

***மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல***
***மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா!***
***பங்கயக் கைந்நலம் பார்தலவோ- இந்நப்***
***பாரில் அறங்கள் வளரும் அம்மா***
***(கவிமணி தேசிக விநாயகம்***
***பிள்ளை; மலரும் மாலையும்;***
***பெண்ணின் உரிமைகள் ;பக்149,150)***

என்று பாடுகிறார்

இப்பாடலில் கவிமணி பெண்ணின்றேல் ஆணில்லை என்ற வாழ்வியல் கொள்கையை விளக்குகிறார்.

***உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த***
***உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்***
***அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்***
***அவளாலே மணவாளன் சுத்தி பெற்றான்"***
***(பாரதிதாசன்;***
***பாரதிதாசன் கவிதைகள் பக்.79)***

இவ்வரிகளில் ஒருவன் வாழ்க்கையை சரியாய் நடத்த உதவுபவர் மனைவி என்றும் அவளாலே ஒரு கணவன் ஒழுக்கம் பெறுகிறான் என்பதையும் பாரதிதாசன் குறிப்பிடுகிறார். ஆண், பெண் இருநிலைகளும் சரிசமமாகப் போற்றப்பட வேண்டிய ஒன்று என்பதைப் பாரதிதாசன்

***ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்***
***அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம்***
***(பாரதிதாசன்;***
***பாரதிதாசன் கவிதைகள் பக்.218)***

என்ற வரிகள் மூலம் குறிப்பிடுகிறார்.

## முடிவுரை

பெண்ணியம் என்பது பெண்களை தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும் கோட்பாடுகளின் தொகுப்பாகும். பெண்களின் உரிமைகளைப் பறிக்கிறவர்கள், அவர்களை கட்டுப்படுத்துகிறவர்கள், அவர்களின் முன்னேற்றத்துக்குக் கேடு விளைவிக்கின்றவர்கள் ஆகியவற்றை நீக்குவதே பெண்ணியம் ஆகும்.

## பார்வை நூல்கள்


1. பாரதியார் கவிதைகள் - கழக வெளியீடு
2. புறநானூறு - கழக வெளியீடு
3. திருக்குறள் - தமிழ்க்கனி பதிப்பகம்
4. பெண்ணின் பெருமை - திரு.வி. கல்யாண சுந்தரனார்
5. பாரதிதாசன் பாடல்கள் - கழக வெளியீடு
6. பெண்ணியம் - இரா. பிரேமா
7. பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியம் பயன்பாடுகளும் - முனைவர் இரா. ரெங்கம்மாள்.